2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: ** என்பதை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டுமென்று (குறுக்கீடுகள்) கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) டெல்டா மாவட்டங்களுக்கு கர்நாடக மாநிலத்திலிருந்து காவேரி நீர் பெற நடவடிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியிலே குறுவை சாகுபடி இல்லாமல் சம்பா மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு டெல்லியிலே நடைபெற்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அதுகுறித்து கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லி, உட்காருங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: அந்தக் குழுவில் கர்நாடகம் தண்ணீர் தர முடியாது என்று மறுத்துவிட்டது. இதனால் சம்பா சாகுபடி நடைபெறாதோ என்கிற மிகுந்த அச்சம் கலந்த சூழ்நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதெல்லாம் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா பகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் காவேரி நதிநீர்ப் பிரச்சினை மேற்பார்வைக் குழுவினுடைய கூட்டம் டெல்லியிலே நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 செப்டம்பர் 29

திரு. சு. குணசேகரன்: கர்நாடகா தண்ணீர் தர மறுக்கிறது. அதனுடைய அவசர முக்கியத்துவத்தைக் கருதி இன்றைக்கு அங்கு காவேரி டெல்டா பகுதியிலே கடையடைப்பு போன்ற போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கவனத்தை ஈர்த்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியில் குறுவை பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் சம்பாவைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் பேச வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். திரும்பத் திரும்ப தவறானதை எல்லாம் பேசவேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி சென்னை புழல் சிறையில் கைதிகளுக்கும், சிறை அலுவலர்களுக்கும் இடையிலே நடைபெற்ற. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உங்கள் உறுப்பினர்தான் (குறுக்கீடுகள்) அப்புறம் ரெக்கார்டு பண்ணுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் கோவி. செழியன், என்னவென்று சொல்லுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்படக்கூடிய வகையில் (குறுக்கீடுகள்)

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன், உட்காருங்கள்.

முனைவர் கோவி. செழியன்: கர்நாடக அரசு மேகதாது அணையின் குறுக்கே அணை கட்டுவதைக் கண்டிக்கக்கூடிய வகையிலும், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், (குறுக்கீடு) திரு. க. குணசேகரன், வாய்ப்பில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) நான் பார்க்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். கவனத்தை ஈர்த்துவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசிவிட்டீர்கள். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் பேசும் வாய்ப்பை தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய பெயரைப் பதிவு செய்யலாம். போதும், நீங்கள் உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்பு

கும்பகோணம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை 45C அமைக்கும் பணிகளை விரைவுபடுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்பகோணம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை (N.H.–45C) அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.